


**19. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான விரைவான தொழில்நுட்ப அடித்தளம் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. வேளாண்மையில் நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

3. பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்திற்கு வழிகோலிய பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட தலைவர்களுக்கு கோவையில் சிலை அமைக்கும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

4. நாகை மாவட்டம் செருதூர் வெள்ளையாறு முகதுவாரத்தில் கரை பாதுகாப்பு சுவர் அமைக்க அஇஅதிமுக ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

5. இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான 2ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று நடைபெறுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

*********

**அஷ்விணி வைஷ்ணவ்**

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான விரைவான தொழில்நுட்ப அடித்தளம் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், உலக தரத்திலான தொழில்நுட்பத்தை கருவிகளையும் வடிவமைக்க மாணாக்கர் முன்வர வேண்டும் என்றார்.

செமி கண்டெக்டர் துறையின் முதலாவது தகடு இந்தாண்டு வெளியிடப்படும் என கூறிய அவர், நாட்டின் 6 முக்கிய இடங்களில் இதற்கான உற்பத்தி மைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

ரயில்வே துறையில் சீர்திருத்தங்களை சுட்டிக்காட்டிய அமைச்சர் நாட்டின் முதலாவது புல்லட் ரயில்சேவை இன்னும் இரண்டு ஆண்டுகளில் தொடங்கப்படும் என்றார்.

இதற்கான தயாரிப்பு பணிகள் சென்னையில் நடைபெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு திட்டத்திற்கான பயிற்சிகள் நம் நாட்டில் வழங்கப்படுவதை எடுத்துரைத்த அமைச்சர் 2047 ஆண்டுவாக்கில் உலகளாவிய இரண்டு பொருளாதார சக்திகளில் ஒன்றாக இந்தியா உருவெடுக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

*********

**தர்மேந்திர பிரதான்**

வேளாண்மையில் நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

கேரள மாநிலம் பாலக்காடு இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 7ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், போக்குவரத்து கட்டுமானம், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு பிரிவுகளில் தொழில்நுட்ப தற்சார்பின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையின் கீழ், சர்வதேச அளவில் இந்தியாவின் மின்னணு பொது கட்டமைப்பு, தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் 328 மாணாக்கருக்கு பட்டங்களை அமைச்சர் வழங்கினார்.

*********

**ஆன்மீக உச்சிமாநாடு**

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையில் வளர்ச்சி அடைந்த இந்தியாவில் இளையோரின் ஆளுமையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் போதை பழக்கத்திற்கு எதிரான இளையோர் ஆன்மீக உச்சிமாநாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், போதை பழக்கம் இல்லா இந்தியாவை உறுதி செய்வதில் இளையோர் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

மத்திய அமைச்சர்கள் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத், டாக்டர் வீரேந்திரகுமார் உள்ளிட்டோர் பங்கேற்கும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் போதை இல்லா இந்தியாவிற்கான விரிவான திட்ட செயலாக்க கொள்கை வெளியிடப்படும்.

*********

**மழைக்கால கூட்டத்தொடர்**

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்க உள்ள நிலையில் நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் இக்கூட்டத்தில் அடுத்த மாதம் 21ஆம் தேதிவரை நடைபெறும் மழைக்கால கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த அரசியல் கட்சியினரின் ஒத்துழைப்பு கோரப்பட உள்ளது.

இதனிடையே கூட்டத்தொடரில் கடைபிடிக்க வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங் திரு.அமித்ஷா திரு.ஜே.பி.நட்டா திரு.கிரண் ரிஜிஜு உள்ளிட்டோர் முக்கிய ஆலோசனை மேற்கொண்டனர்.

*********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 124ஆவது முறையாக வரும் 27ஆம் தேதி உரையாற்றுகிறார்.

மக்களிடையே மனம் திறந்து பேசும் இந்நிகழ்ச்சியை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர் இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய தங்கள் கருத்துக்கள் மற்றும் வெற்றி பயணங்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் தம்முடன் பகிர்ந்துகொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

my gov இணையதளம், நமோ செயலி, மற்றும் 1800 11 7800 என்ற எண்ணில் வரும் 25ஆம் தேதிவரை பொதுமக்கள் தெரிவிக்கலாம்.

*********

**எ.வ.வேலு**

தமிழகத்தின் பாசன திட்டங்களில் ஒன்றான பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்திற்கு வழிகோலிய பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட தலைவர்களுக்கு கோவையில் சிலை அமைக்கும் பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 4 கோடியே 28 லட்ச ரூபாய் மதிப்பிலான இப்பணிகளில் பாசன திட்டம் குறித்து இளைய சமுதாயத்தினர் மற்றும் விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

*********

**எடப்பாடி**

தமிழ்நாட்டில் மீண்டும் அஇஅதிமுக ஆட்சிக்கு வரும்பொது நாகை மாவட்டம் செருதூர் வெள்ளையாறு முகதுவாரத்தில் கரை பாதுகாப்பு சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

செருதூர் மீனவ மக்களிடம் இன்று கலந்துரையாடிய அவர் இதுதொடர்பான கோரிக்கை மனுவையும் மீனவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

*********

**அண்ணாமலை**

நாமக்கல் மாவட்டத்தில் சிறுநீரக விற்பனை முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை கண்டறிய சிறப்பு புலனாய்வு குழு அமைத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு.கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், தமிழகத்தில் வரும் சட்டப்பேரவை தேர்தலை பிஜேபி எதிர்கொள்வதில் எவ்வித குழப்பமும் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

திமுகவை வீழ்த்தும் கொள்கையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஒரே புள்ளியில் இணைந்துள்ளதாக கூறிய அவர், 2026ஆம் சட்டப்பேரவை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் திரு.எடப்பாடி பழனிச்சாமி என்பது அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

*********

**இருவரி**

**தமிழகத்தில் நடப்பாண்டு MBBS இளநிலை** மருத்துவ படிப்புகளில் அரசு பள்ளி மாணவர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்களின் வாரிசு தாரர்கள் தங்கள் சான்றிதழ் மற்றும் ஆவணங்களை சரிபார்ப்பதற்கான கால அவகாசம் இன்றுமாலையுடன் நிறைவடைகிறது.

**காஞ்சிபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு மையத்தில்** TNPSC குரூப் 2 தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பு வரும் 21ஆம் தேதிமுதல் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உணவு மற்றும்** குடிநீர் விநியோகிக்கும் நிறுவனங்களில் உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்யுமாறு ஆட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.பிரசாந்த் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பேசிய அவர் உரிமம் புதுப்பிக்க தவறும் கடைகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

**சிவகங்கை மாவட்டத்தில் மீண்டும் மஞ்சள்** பை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் கல்வி, உணவு, வணிகர்கள் அரசின் விருதுபெற வரும் 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆடிதிருவாதிரை** வரும் 23ஆம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்படுவதை ஒட்டி மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஈரோடில் மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் விழிப்புணர்வு பேரணி** இன்று நடைபெற்றது.

மாவட்ட முதன்மை நீதிபதி சமீனா தொடங்கிவைத்த இப்பேரணியில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு நேரடியாகவோ இணையவழி மூலமாகவோ சமரச தீர்வு எட்டுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

*********

**கோவில்**

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவில், ஆடி திருக்கல்யாண உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

*********

**அணை**

கன்னியாகுமரி கடலில் பலத்த காற்று வீசி வருவதால் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு செல்ல 3ஆவது நாளாக தடை நீடிக்கிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கன மழை** காரணமாக குற்றால அருவிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

**தேனி மாவட்டம் மேகமலை ஈத்தக்காடு தூவானம்** அணை பகுதிகளில் மழை தொடர்வதால் சுருளி அருவியில் தண்ணீர் ஆர்பரித்து கொட்டுகிறது.

இதையடுத்து நீர்வரத்து சீராகும் வரை சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை தடைவிதித்துள்ளது.

*********

**நீலகிரி சுற்றுலா**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்துவரும் நிலையில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி பைன்மரக்காடுகள், அவலாஞ்சி உள்ளிட்ட சுற்றுலாத்தலங்கள் தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

*********

**வானிலை**

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்று கன, மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தேனி, தென்காசி, கன்னியாகுமரி வேலூர் ராணிப்பேட்டை திருவள்ளூர் திருவண்ணாமலை சென்னை செங்கல்பட்டு விழுப்புரம் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அம்மையம் கூறியுள்ளது.

*********

**ஆடி அமாவாசை**

நெல்லை மாவட்டம் பாபநாசம் வனப்பகுதியில் அமைந்துள்ள சொரிமுத்து அய்யனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு அகஸ்தியர் அருவிக்கு இன்றுமுதல் வரும் 28ஆம் தேதிவரை சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

*********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான 2ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**